# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,375 — 1924 ம் ௵ மாசிமீ 15 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

"1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் சட்டம்."

வடமாகாணம் மன்னார் டிஸ்திறிக்கில் கட்டுக்கரைக்குள நீர்ப்பாய்ச்சல் பகுதியிலுள்ள காணிக்காரரால் 1919 ம் ஆண்டின் 18 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட பிரகாரம் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் சட்டத்தின் 11 ம் பிரிவின் கீழ் உண்டுபண்ணப்பட்டு அதிகார மந்திரசபையார் யோசனையோடு உத்தம தேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள்.

உத்தமனுரது கட்டளைப்படி,
சிசில் ளெமெந்தி,
கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1924 ம் ஆண்டு தைமீ 18 ந் உ.

மன்னார் டிஸ்திறிக்குக்குரிய நீர்ப்பாய்ச்சல் பிரமாணங்கள்.

1. குளக்கட்டை, வானை, வாய்க்காலை, அல்லது அவைகளுக்காக விடப்பட்ட சேம நிலத்தை யாராவது கூட்டிக்கொள்ள, அல்லது உதவிக்கவண்மேந்து ஏசண்டருடைய அல்லது விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தருடைய உத்தரவின்றிக் குளக்கட்டை வாய்க்காலை, வெட்ட அல்லது வெட்டுவிக்க, அல்லது வானை, வாய்க்காலை அடைக்க, தடைபண்ண, அல்லது எந்தவிதமாயாகுதல் அடைப்பிக்க, அல்லது தடைபண்ணுவிக்கக்கூடாது. மேற்கூறிய உத்தியோகஸ்தரின் கட்டளைப்படியன்றி குளக்கட்டில், வானில், அல்லது வாய்க்காலில் யாராவது எவ்வித வேலையும் செய்யப்படாது. ஆனால் தடையின்றி நேரிடக்கூடிய ஒரு அளிவைத் தடுப்பதற்கு அப்படிப்பட்ட செயல் செய்யவேண்டிய அவசியம் வந்து, இவ்வுத்தியோகஸ்தரில் ஒருவருக்கும் நேரத்துக்கு அறிவித்துக்கொள்ளக் கூடாதிருந்தால், மேற்சொல்லிய உத்தரவு எடாமல் செய்துகொள்ளலாம். ஆனால் அவசியச்செயலாய்ச் செய்துகொண்டதென்பதை அத்தாட்சிப்படுத்தும் பாரம் அதைச் செய்பவர்கள் மேலதாகும்.

2. ஒவ்வொரு காணிக்காரனுக்கும் தன்பங்குக்குத் தக்கபடி பயிருக்கு நீர் கொடுக்கப்படும், ஆனால் 15 ம் பிரமாணத்தின்படி நியமிக்கப்பட்ட திகதிகளுக்குப்பின் விதைக்கப்பட்ட நிலத்துக்கு உதவிக் கவண்மேந்து ஏசண்டர் தேவையென்று காணில் நீர்விடாதபடி கட்டளை செய்யலாம்.

3. ஒவ்வொரு வேளாண்மையும் தொடங்குமுன், ஒவ்வொரு பகுதிக் கமவிதானையுடைய கட்டளையினால் உதவிக் கவண்மேந்து ஏசன்றரின் அனுமதியோடு கூடப்பட்ட கூட்டத்தில் சமுகமாய் இருக்கும் காணிச் சொந்தக்காரரில் அதிகம் பேரால் அவர்களுடைய கிராமக் குளத்திலிருந்து, அல்லது பேர்வாய்க்காலில் இருந்து, தண்ணீர் வேளாண்மைக்கல்லாமல் வேறு எதற்குப் பாய்ச்சப்படலாமென்று தீர்மானம் பண்ணப்படவேண்டும். கமவிதானையுடைய கட்டளையோடும், மேற்பார்வையோடும், எப்பொழுதும் குளத்திலிருந்து நீர் எடுத்துப் பாச்சப்படவேண்டும். முன் மேட்டுத் தரைக்கும், பின் பள்ளத்தரைக்குமாய் தண்ணீர் விடவேண்டும்.

4. யாதாமொரு வயலுக்கு அல்லது கூட்ட வயல்களுக்கு நீர்பாய்ச்சுவதற்கு ஒரு அளவக்கை அணை அல்லது வேறு வேலை செய்வது தேவையெனக் கண்டால் அவ்வேலைக் காணிக்காறர் தங்கள் தங்கள் காணியின் விசாலத்துக்குத்தக்கபடி செய்துமுடிக்க வேண்டும். அப்படிப்பட்ட வேலைகளைச் செய்துமுடிப்பதற்கு உத்தரவுகேட்கும் விண்ணப்பத்திரங்கள் எழுத்தில் விவசாய உத்தியோகத்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தருக்குக் கொடுபடவேண்டும். உதவிக் கவண்மேந்து ஏசண்டர் கட்டுக்கரைக்குள நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தருடன் யோசனை பண்ணி எவ்விதக் கட்டளை செய்வாரோ அவ்விதமாய் அவராற் குறிக்கப்பட்ட காலத்துள் அவர் காட்டியவண்ணம் அவ்வேலைகள் செய்து முடிக்கப்படவேண்டும்.

5. காணிக்காரர் எல்லாரும் தங்களுடைய காணிகளுக்கு நயம் வராவிடினும் தங்கள் காணிக்கூடாக அப்படிப்பட்ட அளவக்கைகள் அணைகள் கொண்டுபோவதற்கு அல்லது வேறு வேலைகள் செய்வதற்கு இடம் கொடுக்கவேண்டும். ஆனால் அப்படிப்பட்ட வேலையினால் நயம் அடைகிற காணிக்காரர் அவ்வேலை செய்வதினால் நட்டம் அடையும் காணிக்காரருக்கு எடுக்கப்பட்ட காணிக்கு அல்லது செய்யப்பட்ட நட்டத்துக்கு தங்கள் தங்கள் காணியின் வீதப்படிக்கு இப்பிரமாணத்தின்படி நட்டங் கொடுக்கவேண்டியவராவார்கள். கொடுக்கவேண்டிய நட்டம் எவ்வளவென்று உதவிக் கவண்

மேந்து ஏசண்டர் தக்க விசாரணைசெய்து தீர்மானிப்பார். சாதாரணமாய் நயம் அடைகிற வயலுக்குள் அல்லது கூட்ட வயலுக்குள் இருக்கும் நிலத்தின் பேரால் நட்டம் கொடுபடவேண்டியதில்லை. கொடுபடவேண்டுமாயின் உதவிக் கவண்மேந்து ஏசண்டர் அப்படிக் கட்டளை செய்வார்.

6. வயல் வாய்க்காலுக்கென நிலம் விடப்பட்டு அளக்கப்பட்டு கல்முனைகளினால் எல்லை குறிக்கப்பட்ட புது நிலங்களின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் தங்களுடைய காணி இருக்கிற அப்பாகத்தை நீர்பாய்ச்சுவதற்கு படத்திற் காட்டி இருக்கும் வயல் வாய்க்காலின் தங்களுடைய பங்கை வெட்டிக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட காணியின் சொந்தக்காரர் யாராவது மற்றக் காணிக்காரர் அவர்களுடைய வயல் வாய்க்காற் பங்கை வெட்ட அசட்டைபண்ணுவதால் நீர் பாய்க்க வகையில்லாமல் இருந்தால் விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தர் செய்யப்படவேண்டிய வேலை செய்வதற்காக வேறு காணிக்காரரைக் கூப்பிடலாம். தவறுங்கால் விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன் உத்தியோகஸ்தர் தவறும் காணிக்காரனுடைய வேலைப்பங்கை கூலி ஆட்களைக்கொண்டு செய்து முடிக்கும்படி கட்டளைபண்ணலாம். கூலி ஆட்களின் சம்பளம் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 23 ம் பிரிவிற் சொல்லியபடி அறவிடப்படலாம்.

7. 15 ம் பிரமாணத்தின்படி நியமிக்கப்பட்ட திகதிக்கு முன் ஒவ்வொரு காணிக்காரனும் ஒவ்வொரு போக வேளாண்மைக்கும் வயல் வாய்க்காலின் அல்லது அணைவாய்க்காலின் தன் பங்கைத் துப்பரவாக்கித் திருத்திக் கொள்ள வேண்டும் தன்னுடைய காணி செய்கைபண்ணப்பட்டாலும் படாவிட்டாலும் அப்போகம் முடியும் வரைக்கும் தன் பங்கை நல்ல நிலபரத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தர் இப்பிரமாணத்தின்படி செய்யத் தவறினவன் பங்கை கூலி ஆட்களைக்கொண்டு செய்விக்கும்படி சமவிதானைக்குக் கட்டளைபண்ணலாம். கூலி ஆட்களின் சம்பளம் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவிற் சொல்லியபடி அறவிடப்படலாம்.

8. விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தரே எல்லா நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காறருடைய வேலையையும் மேற்பார்ப்பதோடு இப்பிரமாணங்களுக்கமைய நீர்ப்பாய்ச்சலையும் வேளாண்மையையும் பற்றிய சகல காரியங்களையும் உதவிக் கவண்மேந்து ஏசண்டரின் கீழ் நடப்பிக்கும் உத்தியோகஸ்தராம்.

9. 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க சட்டத்தின் 21 ம் பிரிவின்படி ஒவ்வொரு கூட்ட வயல்களுக்கும் அல்லது உதவி கவண்மேந்து ஏசண்டரால் குறிக்கப்பட்ட எந்தப் பாகத்துக்கும் சமவிதானையென்று சொல்லப்படும் ஒரு நீர்பாய்ச்சற் தலைமைக்காரன் தெரிவுசெய்யப்பட அல்லது நியமிக்கப்பட வேண்டும்

10. விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தருடைய மேற்பார்வைக்கும் கட்டளைக்கும் அமைய ஒவ்வொரு சமவிதானையும் தன்னுடைய பகுதியிலுள்ள வேளாண்மையை, நீர்ப்பாய்ச்சலைப்பற்றிய சகல காரியங்களுக்கும் பொறுப்பாளியாவான்.

11. எல்லா நீர்பாய்ச்சற் பிரமாணங்களுக்கும் அமைய நடப்பித்தலும் அவைகளை மீறுபவர்களை விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றண்டன்ற உத்தியோகஸ்தருக்கு அறிவிப்பதும் அச்சமவிதானையின் கடமையாகும்.

12 விதைப்பு முடிப்பதற்கு நியமிக்கப்பட்ட திகதியின்பின் 15 நாளைக்குள் ஒவ்வொரு சமவிதானையும் விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தருக்கு பயிர் செய்பவர்களுடைய பெயரையும் ஒவ்வொருவரும் விதைத்த விசாலத்தையும் விதைப்பு முடிந்த திகதியையும் காட்டும் ஒரு டாப்பு அனுப்ப வேண்டியது.

13. எப்போக வேளாண்மையையும் செய்யும் ஒவ்வொரு வேளாண்மைக்காரனும் தன்னுடைய நிலத்தில் விளைந்த நெல்லில் நூற்றில் இரண்டு பங்கை அந்நிலமிருக்கும் பகுதிச் சமவிதானைக்கு அடைநெல்லாகக் கொடுக்கவேண்டியது.

14. காலபோக வேளாண்மைக்கு விளைதற்கு 5 மாதத்திற்குமேல் வேண்டிய நெல்லையும், இடைப்போகத்திற்கு 4 மாதத்தின்மேல் வேண்டிய நெல்லையும், சிறுபோகத்திற்கு 3 மாதத்திற்குமேல் வேண்டிய நெல்லையும் விதைக்கப்படாது.

15. காலபோக சிறுபோக வேளாண்மை காலத்துக்கு ஒவ்வொரு வருடமும் போதிய அளவு முன்னதாக உதவிக் கவண்மேந்து ஏசன்றர் ஆலோசனைச் சங்கத்தின் கூட்டங்கூடி அங்கத்தோடு ஆலோசித்து வயல் வாய்க்கால் துப்பரவு பண்ணி முடிப்பதற்கும், வேலி அடைத்து அல்லது பழுதுபார்த்து முடிப்பதற்கும், காவல் குடில் கட்டி முடிப்பதற்கும், திகதிகளைத் தீர்மானிப்பர். விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தர் ஒவ்வொரு சமவிதானைக்கும் அத்திகதிகளைப்பற்றி எழுத்தில் அறிவிப்பர்.

16 15 ம் பிரமாணத்தின்படி எந்தெந்த நெல்லு எந்தெந்த திகதிக்குள் விதைத்து முடியவேண்டுமோ அத்திகதிக்குப் பின் அந்நெல்லு ஒருவரும் விதைக்கப்படாது.

17 இடைப்போகம் செய்வதற்கு விசேஷ நியாயங்கள் இருந்தால் மாத்திரம் உத்தரவு கொடுக்கப்படும் செய்யின் உதவி கவண்மேந்து ஏசண்டரிலிருந்து உத்தரவுப்பத்திரம் பெற்று, அப்பத்திரத்திற் சொல்லிய பொருத்தங்களுக்கமைந்துகொள்ள வேண்டும்

18. சிறுபோகம் செய்பவர் எவரும் உதவிக் கவண்மேந்து ஏசண்டரிடமிருந்து உத்தரவுப்பத்திரம் பெற்றாலொழிய செய்யப்படாது.

19. இடைப்போகம் சிறுபோகத்துக்கு காணிக்காரர் தந்தம் காணியைச் செய்கைபண்ணிப் பயிர்செய்வது கடமையல்ல. சிறுபோக இடைப்போகங்களுக்கு வேலிஅடைத்தல் காவல்வைத்தல் முதலிய கடமைகளெல்லாம் இவ் வேளாண்மையைச் செய்யத் தொடங்கினவர்களே செய்யவேண்டியது. செய்யத் தொடங்கினவர்கள் தங்கள் பங்கு விளைந்தாலும் விளையாவிடினும் இடைப்போக சிறுபோக வேளாண்மை முடியுமட்டும் அக்கடமைகளை யெல்லாம் செய்ய வேண்டியது.

20. உதவிக் கவண்மேந்து ஏசண்டர் ஆலோசனைச்சங்கத் தலைவர்களினதும் கட்டுக்கரைக்குள நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரினதும் அனுமதியோடு சிறுபோகத்திற்கு எவ்வளவு விசால நிலம் விதைக்கப்படலாமென்று தீர்மானிப்பர். ஒவ்வொரு காணிக்காரனும் சிறுபோகத்திற்கு விடப்பட்ட முழுவிசாலத்தில் ஒரு பங்குக்கு உத்தரவுப்பத்திரம் பெற உரித்துடையன் அப்பங்கு அவன் நீர்வரி கொடுக்கிற முழு நிலத்துக்குத் தக்க வீதப்படியாகும்.

21. உதவிக் கவண்மேந்து ஏசண்டர் ஆலோசனைச்சங்கத்தோடும் கட்டுக்கரைக்குள நீர்ப்பாய்ச்சல் உத்தியோகஸ்தரோடும் ஆலோசித்து எந்த வயல்களில், குளங்களில் சிறுபோகம் செய்யக்கூடுமென்று தீர்மானிப்பர்

22. உதவிக் கவண்மேந்து ஏசண்டரிடமிருந்து உத்தரவுப்பத்திரம் பெற்றாலொழிய குளநிலத்திலொருபங்கையும் ஒருவரும் செய்கைபண்ணப்படாது.

23. கட்டுக்கரைக்குளத்தின் கீழ் நீர்வரி கொடுக்கவேண்டிய காணியின் சொந்தக்காரர் அல்லாத வேறெவர்களும் ஒரு கிராமக் குளத்தின் எப்பாகமிலாவது புலவேளாண்மைசெய்ய உத்தரவுப்பத்திரம் கொடுக்கப்படமாட்டா. காலபோக வேளாண்மையானால் அக்குளத்திலிருந்து நீர்பாய்ச்சப்படும் நிலத்தின் சொந்தக்காரர் அல்லாத மற்றவர்களுக்குக் கொடுக்கப்படமாட்டா.

24. 22 ம் 23 ம் பிரமாணங்களுக்கு அமைய ஒவ்வொரு காலபோக வேளாண்மைகாலத் தொடக்கத்திலும் ஒரு கிராமக்குளத்தின் கீழுள்ள வயல்களின் சொந்தக்காரர் அதிகம்பேர் அப்போகத்துக்குக் குளநிலம் அல்லது அதின் ஒரு பாகம் செய்கைபண்ணுகிறதோ வென்று தீர்மானிப்பர். ஒரு பாகத்தை செய்கைபண்ணத் தீர்மானித்தால் ஒவ்வொரு காணிக்காரனுக்கு முள்ளவயல் நிலப்பங்குக்குத் தக்கபடி அக்காணிக்காரனுக்குக் குளநிலப்பங்கு கிடைக்கும். அந்தக் குளத்திற் செய்கைபண்ணக்கூடாதென்று காணிக்காரரில் அதிகப்பேர் தீர்த்துக்கொண்டால் ஒருவரும் அக்குளத்தில் ஒருபாகத்தையும் செய்கைபண்ணப்படாது. இத்தீர்மானத்துக்கு விரோதமாக உதவிக் கவண்மேந்து ஏசண்டரிடம் அப்பல் கேட்கலாம் அவருடைய தீர்ப்புக் கடைசிமுடிவாகும்.

25. ஒவ்வொரு காணிக்காரனும் தங்கள்பங்கை விதைத்தாலும் விதையாமல்விட்டாலும் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டியது. காணிக்காரன் சுகயீனத்தால் அல்லது விலக்கவொலாத காரணம்பற்றி தனபங்கைச் செய்யாமல்விட்டால் உதவிக் கவண்மேந்து ஏசண்டர் தகுந்த நியாயமென்று காணில் 34 ம் பிரமாணப்படி அந்த வருடத்துக்கு செய்ய வேண்டிய வேலையைச் செய்வியாது அல்லது பதற்பணத்தை அறவிடாது விலக்கிவிடுவர்.

26. ஒரு காணிக்காரன் தான் செய்யக்கூடாதாயின் வாரக்குடியை அல்லது பதிலாளை வைத்து தன்பங்கை செய்கைபண்ணுவித்து மறறும் கடமைகளையும் செய்விககலாம். ஒரு காணிக்காரனுடைய வேலையில் இருககும் வாரக்குடியை அல்லது பதிலாளை அவர் சம்மதமின்றி வேறொரு காணிககாரன் தன்வேலையில் ஏற்படுத்தப்படடாது.

27. 15 ம் பிரமாணத்தின்படி நியமிக்கப்பட்ட திகதிககுமுன் ஒவ்வொரு காணிக்காரனும் சமவிதானையினாற் காட்டப்பட்ட இடத்தில் ஒரு சரியான காவறகுடில்வைத்துத் தன்னுடைய அருவிவெட்டினாலும் வெட்டாவிட்டாலும் வயலி லுள்ள அருவியெல்லாம் வெட்டிமுடியுமட்டும் காவல்காககவேண்டியது. விவசாய உத்தியோகஸ்தா என்னும் நீர்ப் பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உததியோகஸ்தர் காவல்குடில் வைக்கத்தவறும் காணிக்காரனுடைய காவற்குடிலை சமவிதானையால் இந்தப்பிரமாணத்தின்படி கூலிஆட்களைக்கொணடு வைப்பிதது பராமரிககலாம். கூலிஆட்களின் சம்பளம் 1917 ம் ஆண்டின் 45 ம் இலகக சட்டத்தின் 23 ம் பிரிவிற் சொல்லியபடி வைககத்தவறிய காணிககாரனிடம் அறவிடப் படலாம்.

28. ஒரு காணிக்காரனின் வயலின் விசாலத்துக்குத் தக்கபடி அவனுடைய வயலை மருவியபங்காளனும் அல்லாவிட்டாலும் அககாணிககாரனுககுப் பயிர்செய்வார்கது வயல்வேலியில் ஒருபங்கு சமவிதானையால் அடைக்கும்படி பிரித்து விடப்படும். 15 ம் பிரமாணத்தின்படி நியமித்த திகதிககுமுன் ஒவ்வொரு காணிக்காரனும் தன்னுடைய பங்குவேலியை அடைத்து அல்லது பழுதுபார்த்துக கொள்ளவேண்டியது. மாடாடுகள் பிரிக்கமாட்டாததாக எல்லாவேலியும் போதிய பெலமுடையதாய் அடைக்கப்படவேண்டியது. ஒவ்வொரு காணிககாரனும தன்னுடைய பங்கைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் அருவிமுற்றாய் வெட்டி முடியுமட்டும் வேளாண்மைகாலம் முழுதும் தன்வேலிப்பங்கை நல்ல நிலபரத்தில் வைத்திருககவேண்டியது. இந்தப்பிரமாணத்திற் சொல்லியபடி வேலி அடைககத்தவறும் காணிக்காரனுடைய பங்கை விவசாய உததியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தர் சமவிதானையால் கூலிஆட்களைக்கொண்டு அடைப்பித்து பராமரிககலாம். கூலிஆட்களின் சம்பளம் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்கச்சட்டத்தின் 23 ம் பிரிவிற் சொல்லியபடி தவறும் காணிக்காரனிடம் அறவிடப்படலாம்.

29. ஒவ்வொரு களத்தின் பங்குக்காரரும் அக்களத்தைச்சுற்றி பெலமானமுறை கட்டைஅடித்து வேலிபோட்டு எல்லாரும் நெல்லுமிதித்து எடுக்குமட்டும் கவனமாய் பார்த்துக்கொள்ள வேண்டியது. ஒவ்வொரு பங்காளரும் தனது நெல்லுமிதித்து எடுத்தபின் குறைந்தபடி 14 நாளைக்காகுதல் களத்தைக் காவல்பார்த்துக்கொள்ள வேண்டியது.

30. செய்கைபண்ணிப் பயிரிடும்காலத்து எருமைகளைஎல்லாம் வயலிலிருந்து தூரத்திலே கழுத்திற் சிதப்பை கட்டிவிடவேண்டும். வேலிமுறிககிற அல்லது வேறு மோசம செய்யக்கூடுமென்று அறிந்த மிருகங்களைப் பிணைத்துவிட வேண்டியது. மாடாடுகளை வயலுக்குப்புறத்தில் பகலில்மேய்த்து இரவில் பட்டியில அடைக்கவேண்டியது. கவண்மேந்து ஏசண்டர் அல்லது உதவிக் கவண்மேந்து ஏசண்டர் தக்க விசாரணைசெய்து ஒரு கிராமத்தில் பயிர்செய்கைப் போகத்துக்கு மாடாடுகள் அடைககும் ஒரு இடத்தைக குறித்துவிட்டிருந்தால் அந்த இடத்தைவிட குளத்துககு வயலுககு அல்லது கிராமத்துக்கு விட்ட வேறிடத்தில் ஒரு காணக்காரரும் அடைக்கப்படாது. சொந்தககாரர் தங்கள் தங்கள மாடாடுகளை அடுத்த கிராமத்தில் பயிரில போகவும் அதற்குக்கிட்ட அல்லது அடுத்த கிராமத்து எல்லைககுள் அடைக்கவும் மேயவும் விடப்படாது.

31. எல்லாக் காணிக்காரரும் அவரவர்களுடைய வயல்களுக்கு எந்தகுளம் குளக்கட்டுவான் வாய்க்கால்களையெல்லாம் மரம்பூண்டுகள் அல்லது தடைகளில்லாமல் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும். அவ்வேலையில் ஒருபங்கு ஒவ்வொரு காணக்காரனுக்கும் அவனவன் காணிக்குத்தக்கபடி சமவிதானையால் பிரித்து விடப்படும்.

32. உதவிக் கவண்மேந்து ஏசண்டர் அல்லது அவருடைய கட்டளை செலுத்துகிற யாராவது அவசரம் பழுது பார்ப்பதற்காக அல்லது தடையின்றி நேரிடக்கூடிய தீங்கைத தடுப்பதறகாக ஒரு கிராமத்தாரை வேலைக்கு அமைத்தால் ஒவ்வொரு காணிக்காரனும் தானாக அல்லது பதிலாளை யனுப்பி அந்தவேலை முடியுமட்டும் தினந்தோறும் செய்துமுடிக்க வேண்டியது. இதற்குப் பதிறபணம் ஏற்கப்பட மாட்டாது.

33. ஒரு கிராமக்குளத்தினால் நீர்பாச்சப்படுகிற ஒவ்வொரு காணிக்காரனும் உதவிக் கவண்மேந்து ஏசண்டர் தக்க விசாரணைபண்ணி அது செய்யவேண்டுமென்று கட்டளைபண்ணுகிற பிரகாரம் குளத்தை அல்லது அதைச்சேர்ந்த அளவக்கை நீர்வாய்க்கால்களை வெட்ட பழுதுபார்க்க, புதுப்பிக்க திருத்த அல்லது பாதுகாத்துக்கொள்ளத் தேவையான எந்தவேலையையாவது வருஷத்துக்கு வருஷம் பின்வரும் வீதப்படிக்குச் செய்யவேண்டும். அல்லது அதற்குச் சரியான பணம் கட்டவேண்டும். அதாவது தனககுரிய ஒருபுசல் விதைப்புத்தறைக்கு அல்லது அதிற்குறைந்த விசாலமுள்ள தறைக்கு ஆறுநாள் வேலைசெய்ய வேண்டும். அல்லது நாளொன்றுக்கு 50 சத வீதமாக அதற்குச் சரியான பணம் கட்ட வேண்டும். கூடஇருக்கும் ஒவ்வொருபுசல் விதைநிலத்துக்கும் ஒருநாள்வேலை அல்லது அதற்கிணையான பணமிறுக்க வேண்டும்.

34. விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தர் ஒவ்வொரு சமவிதானைக்கும் 33 ம் பிரமாணத்திற் சொல்லிய வேலைசெய்ய ஒரு கிராமத்தாரை அழைககமுன் 10 நாளைககுக் குறையாதபடி நொத்தீசு எழுத்திற் கொடுக்கவேண்டும்.

35. வேலைசெய்யாது பதிற்பணம் கட்டவிரும்பும் காணிக்காரர் அவ்வேலைசெய்து முடியவேணுமென்று நியமித்த திகதிக்குமுன் தாம் கட்டவேண்டிய முழுப்பணத்தையுங் கட்டவேண்டியது. வேலைசெய்ய விரும்பும் ஒவ்வொரு காணிக்காரனும் நியமிக்கப்பட்ட இடத்திறகு காலை ஆறு மணிக்குப்போய் பகல் 11 மணி வரையும் மறுபடியும் பிறபகல் 1 மணி தொடங்கி 5 மணி வரையும் வேலைசெய்து அவ்வேலைக்குப் பொறுப்பாய் இருககும் உத்தியோகஸ்தரினால் கவனமாய் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்து முடிக்கவேண்டியது. ஒரு குளி (கீப்பு) மண் வேலை 2 முழு நாள் வேலைக்குச் சரியாய் மதிக்கப்படும்.

36. காணிச் சொந்தக்காரர்கள் தங்களுடைய வயல்களில் உண்டாகும் தண்ணீர் சேதத்துக்குப் பொறுப்பாளிகளாவார்கள். விவசாய உத்தியோகஸ்தர் என்னும் நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் உத்தியோகஸ்தர் உடைய ஆலோசனைப்படி உதவிக் கவண்மேந்து ஏசண்டர், தான் தகுந்ததென்று எண்ணுகிற பிரகாரம் இந்த ஒழுங்குகளின்படி எந்தவேலையாகுதல் காணிச் சொந்தக்காரர்கள் செய்யத் தவறினதால் தண்ணீர் மேலதிகமாகத் தேவைப்படும் காணிகளுக்குத் தண்ணீர் கொடுக்கிறதைத் தடைபண்ண, மாற்ற, அல்லது வேறு வகையாய் நடப்பிககலாம்.

37. எந்த நீர்வாய்க்காலிலும் அல்லது வேறு வாய்க்காலிலும் நெல் விதைக்கப்படாது.

38. மேற்கூறிய பிரமாணங்களை அசட்டைசெய்வோரும் அவைக் கமையாது மீறி நடப்பவர்களும் 1917 ம் ஆண்டின் 45 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 5 ம் பாகத்தில் சொல்லப்பட்ட தண்டனைக்குள்ளாவார்கள். மேற் சொல்லிய பிரமாணங்களில் விவசாய உத்தியோகஸ்தர் அல்லது நீர்ப்பாய்ச்சல் சுப்பிறின்றெண்டன்ற் என்று குறிக்கப்படுபவர் 1922 ம் ஆண்டின் 22 ம் இலகக கட்டளைச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1917 ம் ஆண்டின் 45 ம் இலகக நீர்பாச்சல் கட்டளைச்சட்டத்தின் 20 (A) பிரிவின்படி உதவிக் கவண்மேந்து ஏசன்றரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரேயாம்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காரிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் காலி நகரத்து ஆரோக்கியரக்ஷணைய சௌக்கியத்துக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 12,384. குறிச்சி—காலி கடைதெருவு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 140 | நொ. 264 ம் காணியில் சிலது .. | கடையில் சிலது .. | ஓ. எஸ். ஸீ. மீராசா .. | 0 | 0 | 0·17 |
| 141 | ஷை .. .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 0·36 |
| 142 | நொ. 264A ம் காணியில் சிலது .. | ஷை .. | எம். ஏ. இசோஹாமி .. | 0 | 0 | 0·09 |
| 143 | ஷை .. .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 0·40 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஆல் மார்ச்சுமாதம் 12 ந் தேதியிலன்று 2 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1924 ம் ஆல் பெப்றவரிமீ 8 ந உ.

ரீ. பீ. றஸல்,
தென்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் துன்டுவயில் பாடசாலை ஒன்று கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 12,419. குறிச்சி—துன்டுவை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கழுபொதுபழவத்தை | .. தோட்டம் | .. (1) ஓ. எல். ஐ. எல். மரிக்கார், துன்டுவை; (2) ஏ. டப்ளியு. மரிக்கார், நொ. 45, புதிய சோனகத் தெருவு, கொளும்பு; (3) உம்மா சயீதா, மேற்படி; (4) டப்ளியு. எம். எம். எச். ஹாஜீயார் மேற்படி; (5) எம். ஜீ. டப்ளியு. மரிக்கார், நொ. 67, பளைய சோனகத் தெருவு, கொளும்பு; (6) உம்முறஹீமா மேற்படி; (7) ஏ. ஆர். எல். அப்துல்கரீம் மேற்படி; (8) எஸ். ஜி. டப்ளியு. மரிக்கார், "ரிட்ஜீட்" தெருவு, பம்பழபிடிய; (9) ஏ. எல். டப்ளியு. மரிக்கார், "ஹழச்டோப்" தெருவு, கொளும்பு; (10) உம்முல்புகேரு மேற்படி | 0 | 1 | 4·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஆல் மார்சு மாசம் 12 ந் தேதியிலன்று 2 மணிகு காலீ கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலீ கச்சேரி,
1924 ம் ஆல் பெப்றவாரிமீ 8 ந உ.

ரீ. பீ. றஸல்,
தென்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு பள்ளிக்கூடம் கட்டுகிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 12,439. குறிச்சி—பெனட்டியன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மஹஹேனே அல்லது பொறலு கொடகொறட்டுவ | பங்கிரி .. | விக்ரமசிங்ஹ வித்தானே டொன் உபேரிஸ் டசில்வா பெனட்டியன, பொலிஸ் ஒபிசர் | 0 | 3 | 10 |
| 2 | பெனட்டியனகந்தேஹேனே .. | பங்கிரி .. | ஷை .. .. | 0 | 0 | 30 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஆல் பங்குனிமாசம் 24 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு அகுரெஸ்ஸ தானாயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமகு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறை கச்சேரி,
1924 ம் ஆல் மாசிமீ 11 ந உ.

ஜி. எஸ். வுட்மென்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

## உரிமைபெறும யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 8,523 கொழும்பு.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1924 ம் ௵ (பெபுருவரி) மாசிமீ 15 ௳ திகதி தவககம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எல். எல். கன்ரர் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கன்ரர்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

மேல்மாகாணம் கொளும்பு டிஸ்திறிக் சியனேகோறளை மேற்கு மெதபத்துவ கனேமுல்லக் கிராமத்திலிருக்குமித்துட னணைக்கப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே, கீழ்க்குறிககப்படுங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 16,127.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 4 | மில்லகாவத்தை (கூட்டிப்பிடித்த) | 0 0 3·43 |

எல்லைகளாவன: வடக்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாம் றெயில்வே சேமிப்பு; கிழக்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் மில்லகாவத்தை; தெற்கு-எல. டொன் கொறனேலிஸ் வுருத்தாடும் மில்லகாவத்தை; மேற்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் றெயில்வே சேமிப்பு.

II.—பிரதமபடம் 16,127.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 9 | அஙுபோகாபில்லேவ (கூட்டிப்பிடித்த) | 0 0 8·25 |

எல்லைகளாவன: வடக்கு-எம். டொன் யகோனிஸ் அமறசிங்கியும் மறுபேரு முருத்தாடும் மில்லகாவத்தை, பிற்றஎல; கிழக்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் அஙுபோகாகும்புற, (எம். டொன் வேலொன் அமறசிங்கி கூட்டிப்பிடித்த) பிற்றஎல, பிற்றஎல, இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் றெயில்வே சேமிப்பு; தெற்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் றெயில்வே சேமிப்பு; மேற்கு-முடியில் விருநது குத்தகைக்கு எடுக்கப்பட்ட மில்லகாவத்தை.

III.—பிரதமபடம் 16,127.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 14 | கெவியகாவத்தை (கூட்டிப்பிடித்த) | 0 0 33·68 |

எல்லைகளாவன: வடக்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் றெயில்வே சேமிப்பு; கிழக்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் செவியகாவத்தை (றெயிலவே பிம); தெற்கு-மிலாவேஆச்சிகே தெலிஸ்னைதே வுருத்தாடும் கெவியகாவத்தை; மேற்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் கெவியகாவத்தை, இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் றெயில்வே சேமிப்பு.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 187 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.
[கொழும்பு வி. உ. 9—1924.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,524, கொழும்பு.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1924 ம் ௵ (பெபுருவரி) மாசி மாதம் 15 ௳ திகதி தவககம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எல். எல். கன்ரர் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவறறை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கன்ரர்,
விசேஷ உத்தியோகத்தர்.

கவனிப்பு—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

மேல்மாகாணம் நீர்கொழும்பு டிஸ்திறிக் கப்பிற்றிக்ம்கோறளை யற்றிககாபத்துவ இன்கிபறப்பேக் கிராமத்லிருக்குமித்துட னணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 16,154.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 3 | வற்றகேயாபொத்தேகும்புற | 0 0 1·12 |

எல்லைகளாவன; வடக்கு-டி. செ. சந்திறசேகெற வுருத்தாடும் வற்றகேயா பொத்தேகும்புற, பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட வற்றகேயா பொத்தே ஓவிற்ற; கிழக்கு-பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்ககப்பட்ட றெயில்வே லயின்; தெற்கு-பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட றெயில்வே லயின், பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கெபெல்ல இனியகும்புற; மேற்கு-டி செ. சன்டறசேகெற வுருத்தாடும் வற்றகாயபொத்தேகும்புற.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 188 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.

II.—பிரதமபடம் 16,154.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 9 .. | திவலகும்புற .. .. .. .. | 0 0 8·37 |
| 10 .. | மகாகும்புற .. .. .. .. | 0 0 0·65 |
| 11 .. | கெபெல்லஇனியகும்புற .. .. .. .. | 0 0 16·12 |
| 12 .. | கொலாவேகும்புற .. .. .. .. | 0 0 3·37 |
| | | 0 0 28·51 |

எல்லைகளாவன : வடக்கு-பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட றெயில்வே லயின், அம்பனக் கிராம எல்லை ; கிழக்கு-டி. செ. சன்டிறசேகெற வுருத்தாடும் திவலகும்புற, எ. கரோன்சி அப்பகாமி வுருத்தாடும் மகாகும்புற, டி. செ. சன்டிறசேகெற வுருத்தாடும் கெபெல்ல இனியகும்புற; தெற்கு-டி. செ. சண்டிறசேகெற வுருத்தாடும் கெபெல்ல இனியகும்புற மேறபடியார் வுருத்தாடும் கொலாவகும்புற, சியம்பலகொடைக் கிராம எல்லை ; மேற்கு-பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட றெயில்வே லயின்.

[கொழும்பு வி. உ. 10—1924.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,525, கொழும்பு.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால்; அவர்கள் 1924 ம் ஷுப (பெபுருவரி) மாசிமீ 15 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திறகுள் 1897 ம், 1899 ம், 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எல். எல். கன்ரர் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக் குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கன்ரர்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

மேல்மாகாணம் நீர்கொழும்பு டிஸ்திறிக் கப்பிற்றிகம்கோறளை யற்றிககாபத்துவ, மிதொல்லவலக் கிராமத்திலிருக்கு மித்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 16,144.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 5 .. | தம்பகிற்றியாவகும்புற .. .. .. .. | 0 0 1·50 |

எல்லைகளாவன : வடக்கு-சி. சயோனிஸ் அப்புவும் மறுபேரு முரித்தாடும் தம்பகிற்றியாவகும்புற, சுருஎல ; கிழக்கும், தெற்கும்-சுருஎல ; மேற்கு-சி. சயோனிஸ் அப்புவும் மறுபேரு முரித்தாடும் தம்பகிற்றியாவகும்புறவும்.

II.—பிரதமபடம் 16,144.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 13 .. | மகாஓவிற்ற .. .. .. .. .. | 0 1 10·37 |

எல்லைகளாவன: வடக்கு-சுருஎல ; கிழக்கு-வை. சிஞ்சியவும் மறுபேரு முரித்தாடும் மகாஓவிற்ற, ரி. பபிலிஸ் அப்புவும் மறுபேரு முரித்தாடும் மகாஓவிற்ற; தெற்கு-ரி. பபிலிஸ் அப்புவும் மறுபேரு முரித்தாடும் மகாஓவிற்ற, பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட மகுலகாஓவிற்ற; மேறகு-சுருஎல.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 189 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.

[கொழும்பு வி. உ. 11—1924.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,526, திருக்கோணமலை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்கிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1924 ம் ஷுப (பெபுருவரி) மாசி மாதம் 15 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே திருகோணமலை கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணி அல்லது அதிலெதற்காவது அல்லது அதிலே யாதும் உடந்தைககு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டத்திலுல் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாத குறித்த காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டவிள்யு. எல். மோர்பி,
உதவி அரசாட்சி ஏசென்று.

கவனிப்பு.—குறித்த காணிகளுக்கூடாக விருக்கும் வழிப்பாதை உரித்து காணிகளிலுள்ள சோந்தைக்குரித்து.

சொல்லப்பட்ட காணிகளின் விபரம்.

இதன்கீழ் அிணைக்கப்படும் படத்தில்* விபரித்திருக்கும் கீழ் மாகாணம் திருக்கோணமலை டிஸ்திறிக்கு திருக்கோணமலை சுகாதார எல்லைகுட்பட்ட திருக்கோணமலை பட்டணப் பகுதி 12 ம் நெம்பரிலிருந்து பின்வருங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் 5,655.

| கண்ட இல. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 .. | பாலமவயல்காடு .. .. .. .. | 0 3 32 35 |
| 2 .. | ஷை (பெரிய றோட்டுக்காக விடப்பட்ட நிலம்) .. .. | 0 0 17·64 |

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 191 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

| கண்ட இல. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 3 | .. | பாலம்வயல்காடு (சிறு ரேட்டுக்காக விடப்பட்ட நிலம்) .. .. | 0 | 1 | 10·33 |
| 4 | .. | பாலம்வயல் .. .. .. .. | 1 | 1 | 11·23 |
| 5 | .. | ஷை (நீரோடைக்காக விடப்பட்ட நிலம்) .. .. | 0 | 1 | 39·13 |
| 6 | .. | ஷை (செய்கைபண்ணுமல் விடப்பட்ட நெற்காணி) .. .. | 2 | 1 | 9·80 |
| 7 | .. | ஷை (பெரிய ரேட்டுககாக விடப்பட்ட நிலம்) .. .. | 0 | 3 | 27·12 |
| | | | 6 | 1 | 27·60 |

எல்லை: வடக்கு-காலஞ்சென்ற அ. முத்துக்கிருஷ்ணுவின் உரித்தாளர்கள் உரித்துச்சொல்லும் பாலம் வயல்காடும் (P P. 5;3·6 117) முடிக்குரிய பாலம் வயல்காடும்; கிழககு-நிலாவெளியிலிருந்து திருக்கோணமலைக்குப் போகும் ரேட்டு; தெற்கு-வண்ணூரச் செல்லன் உரித்துச்சொல்லும் பாலமலயல்தோட்டமும் சின்னப்பர் உரித்துச்சொல்லும் பெரியதொடுவாயததோட்டமும்; மேற்கு-"Love Lane" என வழங்கும் ரேட்டும்.

---

[அறிவித்தல் இலக்கம் 8,527, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1924 ம் ஷூ (பெபுருவரி) மாசிமாதம் 15 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம் 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டஙகளின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எவ். லீச் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எவ். லீச்,
விசேஷ உத்தியோகத்தர்.

கவனிப்பு—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் வன்னிகத்பத்து கற்றுவானக் கோறளை றேகோகமக் கிராமத்திலிருக்குமித்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங காணித்துண்டுகள் :—

இலங்கை யழவைப் பிரதமபடம் 1,893.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கோங்காமுலகேன .. .. | 77 | 0 | 8 | 16 | காற்பாதை .. .. | 0 | 0 | 22 |
| 2 | கன்சப்பாவ ரேட்டும் சேமிப்பும் .. | 2 | 3 | 32 | 17 | போகாகேன .. .. | 140 | 1 | 31 |
| 3 | வெவஇகலகேன .. .. | 35 | 1 | 30 | 22 | ஷை .. .. | 0 | 3 | 4 |
| 4 | றேகோகமகாவெவ (குளமும் கட்டும்) .. | 27 | 0 | 30 | 25 | வல்பாஹுவேகேன (குளக்கட்டுச் சேமிப்பு) | 0 | 2 | 30 |
| 5 | வெவிவெ வகேன்யாய .. .. | 13 | 2 | 39 | 26 | வல்பாஹுவேவெவ (குளமும் கட்டும்) .. | 2 | 3 | 28 |
| 6 | காற்பாதை .. .. | 0 | 0 | 6 | 28 | வெல்பில்லேவ .. .. | 7 | 1 | 39 |
| 7 | சியம்பலகாமுலகேன .. .. | 4 | 3 | 32 | 29 | கோங்ஓயா (சிற்ருறு) (பகுதி) .. | 0 | 0 | 39 |
| 9 | மீகாமுலகேன .. .. | 0 | 1 | 4 | | | | | |
| 15 | சியம்பலகாமுலகேன (குளக்கட்டுச்சேமிப்பு) | 1 | 0 | 4 | | | 315 | 1 | 18 |

எல்லைகளாவன: வடக்கு-கன்கிலிபொலக் கிராம எல்லை; கிழச்கு விகேனேகமக் கிராம எல்லை, கோங் ஓயாவின் பகுதி (கம்மிற்றகமக் கிராம எல்லை); தெற்கு-கோங் ஓயாவின் பகுதி (தம்மிற்றகமக் கிராம எல்லை) தம்மிற்றகமக் கிராம எல்லை; மேற்கு பலலல்ல, கொணுமுவ, கனகிலிபொலக் கிராம எல்லைகள்.

கவனிப்பு—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலினின்று விலக்கப்பட்டிருககின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகும் 32 ஏக்கர் 3 றூட் 36 பேட்சும் மேற்சொல்லிய 315 ஏககர் 1 றூட் 18 பேட்சுக்குள்ளு மடங்கவில்லை என்பதையுங் கவனிக்கவேண்டியது :—

இலங்கை யழவைப் பிரதமபடம் 1,893.

| காணித் துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A 8 | அம்பகாமுலவத்தை .. .. | 0 | 1 | 26 | A 19 | போகாகொற்றுவவெல, வெற்றியகும்புறயாய .. .. | 22 | 3 | 31 |
| A 10 | மாறகாவத்தை .. .. | 0 | 1 | 0 | A 20 | எற்றதம்புகாமுலவத்தை .. | 0 | 1 | 23 |
| A 11 | கதுறுகாமுலவத்தை .. .. | 0 | 0 | 37 | A 21 | கதுறுகாமுலவத்தை .. .. | 0 | 1 | 39 |
| A 12 | மீகாமுலவத்தை .. .. | 0 | 1 | 4 | A 23 | கோங்காமுலவத்தை .. .. | 1 | 2 | 31 |
| A 13 | ஷை .. .. | 0 | 1 | 28 | A 24 | வெற்றியகும்புறகமத்த .. | 0 | 0 | 11 |
| A 14 | கொரேவ்எல (சிற்ருறு) .. | 0 | 1 | 5 | 27 | கதுறுகாகும்புற, இகலவல்பாஹுவெல .. | 5 | 0 | 1 |
| A 18 | கோங்காகும்புற (145,523 ம் உ. ப. ல் காணுங் காணி) .. | 0 | 2 | 0 | | | | | |
| | | | | | | | 32 | 3 | 36 |

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 192 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 2—1924.]

[அறிவித்தல் இலக்கம் 8,528, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1924 ம் ஹூ (பெபுருவரி) மாசிமீ 15 ந் தேதி துவக்கம் மூன்றுமாசத்திற்குள் 1897 ம், 1899 ம் 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எவ் லீச் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எவ். லீச்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிக்குள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணியின் விபரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிறியலகத்பத்து நிக்கவகம்பகாகோறளை கற்றுபத்வெவ என்னும் கிராமத்திலித்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 1,880 ம் இலங்கை யழவைப் பிரதமபடத்திலே 32 ஆங் காணித்துண்டாய்க் காட்டப்பட்டு 1 றூட் 16 பேட்சு விசாலங்கொண்டதும் பொதுவாக கோங்காமுலவத்தை (குளக்கட்டுச் சேமிப்பு) என்னும் பெயரினு லறியப்பட்டு அல்லது அழைக்கப்படுவதுமான காணித்துண்டு. இதற் கெல்லைகளாவன: வடக்கு-பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கோம்பகாமுலகேன தியுல்காமுலகேன மகாவத்தேகும்புறவும் மகாவெலவும் (கிராமத்தார்க்குரிய); கிழக்கு-மகாவத்தேகும்புறவும் மகாவெலவும் (கிராமத்தார்க்குரிய) கட்டு (பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கற்றுபத்வெவ); தெற்கு-கட்டு (பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கற்றுபத்வெவ); மேற்கு-பாணிச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்ககப்பட்ட அம்பகாமுலகேன, பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கோம்பகாமுலகேன தியுல்காமுலகேன.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 193 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 3—1924.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,529, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1924 ம் ஹூ (பெப்ருவரி) மாசிமீ 15 ந் திகதியிலிருநது மூன்று மாசத்திற்குள், 1897 ம் 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எவ். லீச் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எவ். லீச்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிக்குள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் புத்தளம் டிஸ்த்திறிக் தெமலகத்பத்து குமாரவன்னிபத்து கோறளை கம்மன்தலுவக் கிராமத்திலிதது டனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 1,828 ம் இலங்கை யழவைப் பிரதமபடத்திலே 36 ஆங் காணித்துண்டாய்க் காட்டப்பட்டு 1 ஏககர் 38 பேட்சு விசாலங்கொண்டதும் பொதுவாகத் தங்கர்வத்தை என்னும் பெயரினு லறியப்பட்டு அல்லது அழைக்கப்படுவதுமான காணித்துண்டு. இதற கெல்லைகளாவன: வடக்கு-கொஸ்காவத்தை (3,0,986 ம் உ. ப. ல் கர்னுங் காணி); கிழககு-அசனலெப்பேகே அபுபக்கர் வுருத்தாடும் கெலம்பகாவத்தை, பாணிலச்சட்டத்தின் பிரகாரம் முடிககுரியதெனத் தீர்க்கப்பட்ட திஸ்பம்ப, அசனலெப்பே அபுபக்கரும் மறுபேரு முருத்தாடும் தங்காகும்புற; தெற்கு-அசனலெப்பே அபுக்காறவும் மறுபேரு முருத்தாடும் தங்காகும்புற; மேற்கு-சியம்பலகாவத்தை, (கிராமத்தார்க்குரிய) அன்தகேனக் கிராமஎல்லை.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 193 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி உ. 4—1924.]

---

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

பிறதேசத்துக் குடிவகை, சாராயம் அல்லது கள்ளு விற்குந் தவறணைகளை ஸ்தாபித்தல் அல்லது நீக்குதலைப்பற்றிய அறிவித்தல்.

இதனடியிற் காணும் அட்டவணையிற் குறிக்கப்பட்டிருக்கும் பிறதேசக்குடிவகை கள்ளுத்தவறணைகளை 1924 ம் ஹூ ஒக்டோபர்மீ 1 ந் திகதி தொடக்கம் நீக்க உத்தேசிக்கப்பட்டிருககிறதென இததா லறிவிக்கப்படுகிறது.

2. இந்தத் தவறணைகள் நீக்குதலைப்பற்றி 1924 ம் ஹூ மார்ச்மீ 31 ந் திகதி வரைக்கும் எழுத்து மூலத்தில் யாதாயினும் விண்ணப்பத்தை நான் ஏற்றுக்கொள்ளுவேன். மேலும், அத்திகதியில் கண்டிக் கச்சேரியில் பிற்பகல் 2 மணிக்கும் 3 மணிக்கு மிடையில் எனக்குச்செய்யும் யாதாயினும் வாக்குமூல விண்ணப்பத்தையும் நான் ஏற்றுக்கொள்வேன்.

கண்டிக் கச்சேரி,
1924 ம் ஹூ பெப்ரவரிமீ 12 ந் திகதி.

டபின்யு எல். இண்டர்ஸ்லி,
மத்தியமாகாண அரசாட்சி ஏஜன்று.

இட விபரம்.

1. கண்டி நகரசங்கத்தில் வட்டபபுலுவை கட்டுகாஸ்தோட்டை என்னும் கிராமத்துக்குள் கள்ளுத் தவறணை.
2. கண்டி நகரசங்கத்தில் காஸில் ஹில் தெருவில் பிறதேசக்குடிவகைத் தவறணை.

H. ROSS COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.